**அங் மோ கியோ தமிழ் மெதடிஸ்ட் திருச்சபை**
***Ang Mo Kio Tamil Methodist Church***

**19th ஜனவரி / January 2025 ஞா யிறு ஆராதனை**

✝ ***ஆராதனைக்கு அழைப்பு*** — ***திருமதி இவாஞ்சலின் திவ்யா***
Call to Worship — Mrs. Evangeline Divya

***இறைவணக்கப்பாடல்*** — ***பாடகர் குழு***
Introit — Choir

***ஜெபம்*** — ***திருமதி. இவாஞ்சலின் திவ்யா***
Prayer — Mrs. Evangeline Divya

✝ ***தொடக்க பாடல்*** — ***சபையார் இணைந்து***
Opening Song — Congregation

***ஆண்டவா பிரசன்னமாகி***

*1. ஆண்டவா! பிரசன்னமாகி*
*ஜீவன்' ஊதி உயிர்ப்பியும்,*
*ஆசை காட்டும் தாசர்மீதில்*
*ஆசிர்வாதம் ஊற்றிடும்*

***அருள்மாரி எங்கள்பேரில்***
***வருஷிக்கப் பண்ணுவீர்***
***ஆசையோடு நிற்கிறோமே***
***ஆசிர்வாதம் ஊற்றுவீர்***

*2. தேவரீரின் பாதத்தண்டை*
*ஆவலோடே கூடினோம்*
*உந்தன் திவ்விய அபிஷேகம்*
*நம்பிநாடி அண்டினோம்*

*3. ஆண்டவா மெய்பக்தர் செய்யும்*
*வேண்டுகோளை கேட்கிறீர்*
*அன்பின் ஸ்வாலை எங்கள்*
*நெஞ்சில்*
*இன்று மூட்டி நிற்கிறீர்*

*4. தாசர்தேடும் அபிஷேகம்*
*இயேசுவே கடாட்சியும்*
*பெந்தே கொஸ்தின் திவ்விய*
*ஈவை*
*தந்து ஆசீர்வதியும்*

✝ ***மாறி வாசித்தல் 3ம் ஞாயிறு*** — ***சபையார் இணைந்து***
"சங்கீதம் 15" — Congregation

"கர்த்தருடைய பரிசுத்த பர்வதத்தில் வாசம் பண்ணுபவன் யார்?"

**Psalter Reading "Psalm 15"**

✝ ***தந்தை போற்றி*** — ***சபையார் இணைந்து***
Gloria Patri — Congregation

***துதி ஆராதனை***
Singspiration

***ஸ்தோத்திர & ஆயரின் ஜெபம்***
Thanksgiving & Pastoral Prayer

***பரமண்டல ஜெபம்*** — ***சபையார் இணைந்து***
Lord's Prayer — Congregation

✝ ***காணிக்கை பாடல்*** — ***சபையார் இணைந்து***
Offertory Song — Congregation

***கண்களை ஏறெடுப்பேன்***

***கண்களை ஏறெடுப்பேன் - மாமேருநேராய் என்***
***கண்களை ஏறெடுப்பேன்.***

***விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து***
***எண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும்.***

*1. காலைத்தள்ளாட வொட்டார் - உறங்காது காப்பவர்*
*காலைத்தள்ளாட வொட்டார்,*
*வேலையில் நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்*
*காலையும் மாலையும் கண்ணுறங்காதவர்.*

*2. பக்தர் நிழல் அவரே - எனை ஆதரித்திடும்*
*பக்தர் நிழல் அவரே,*
*எக்கால நிலைமையில் எனைச் சேதப்படுத்தாது*
*அக்கோலம் கொண்டோனை அக்காலம் புரியவே*

*3. எல்லாத் தீமைகட்கும் - என்னை விலக்கியே*
*எல்லா தீமைகட்கும்*
*பொல்லா உலகினில் போக்குவரத்தையும்*
*நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர்.*

✝ ***பூலோகத்தாரே யாவரும்*** — ***சபையார் இணைந்து***
Doxology — Congregation

✝ ***திருமறைப் பாடம்*** — ***திருமதி. ஆஷா***
***யாத்திராகமம் 33 : 12 - 23*** — Mrs. Asha
Scripture Reading
Exodus 33 : 12 - 23

***அருளுரை*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Sermon — Rev. Vijay Joseph

✝ ***அர்ப்பணகீதம்*** — ***சபையார் இணைந்து***
Offertory & Closing Song — Congregation

**<u>கிருபை எம்மை சூழ்ந்து கொள்ளும்</u>**

**கிருபை எம்மை சூழ்ந்து கொள்ளும் - தம்கிருபை**
**கர்த்தரில் மகிழ்வோம் களிகூர்ந்திடுவோம்**
**கண்டடைந்தோம் கிருபை**

*1. யோர்தானைக் கடந்து வந்தோம் எங்கள்*
*யேசுவில் பெலம் அடைந்தோம்*
*சேனையின் கர்த்தர் முன்னே நடந்தார்*
*சோர்வின்றிக் காத்துக்கொண்டார்.*

*2. தேசமே பயப்படாதே - எங்கள்*
*தேவன்கிரியைச் செய்கின்றார்*
*தேசத்தின் நன்மை க்ஷேமம் அருள்வார்*
*தாசர்கள் வேண்டிடுவோம்*

*3. கர்த்தர் இவ்வாண்டினிலே - பெருங்*
*காரியம் செய்திடுவார்*
*கால் வைக்கும் தேசம் ஏசு தருவார்*
*காத்திருந்தே அடைவோம்*

*4. ஆண்டுகள் நன்மையினால் - முடி*
*சூண்டு வளம் பெருக*
*தேசத்தின் மீதே கண்களை வைத்தே*
*பாசமாய் நோக்கிடுவார்*

*5. ஜாதி ஜனங்களையும் - வந்து*
*மோதி அசைத்திடுவார்*
*காத்து தவிக்கும் உள்ளம் மகிழும்*
*கர்த்தரே வந்திடுவார்*

*6. உண்மையும் நேர்மையுமாய் - இந்த*
*ஊழியம் செய்திடுவோம்*
*தூய கற்புள்ள தேவ சபையாய்*
*தீவிரம் சேர்ந்திடுவோம்*

***அறிவிப்புகள்***
Announcements

✝ ***<u>மனப்பாட வசனம்</u>*** — ***சபையார் இணைந்து***
<u>Memory Verse</u> — Congregation

***ஏசாயா 40 : 31***
Isaiah 40 : 31

***31. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்.***

✝ ***முடிவு ஜெபம் & ஆசீர்வாதம்*** — ***மறைதிரு. விஜய் ஜோஸப்***
Closing Prayer & Benediction — Rev. Vijay Joseph

✝ ***ஆசீர்வாதப் பாடல்***
Benediction Song

✝ ***சபையார் நிற்கவும்*** ⁄ **Indicates Congregation standing**